# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,670 — 1959 පෙබරවාරි 20 වැනි සිකුරාදා — 20.2.1959

11,670 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## துணை விதிகள்

### கிராம சமுதாயச் சட்டம்

*கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள கரைச்சிக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் உண்டாக்கியதும் 1947 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கசெற்" றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சர் அங்கீகரித்ததுமான உபவிதிகள்.*

வீ. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஆல் ஜனவரி மீ 30 ந் உ.

### வாகன, மிருக வரிபற்றிய உபவிதிகள்

**1.** (1) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி திரட்டும் வாகன, மிருக வரியின் பொருட்டு அந்த வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் தமது சொந்தத்தில், பாதுகாப்பில அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் இதன் "அ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதும் சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளக் கூடியதுமான பத்திரத்தின் மாதிரியில் ஒரு விபர அட்டவணையைத் தலைவரிடம் கொடுக்கவேண்டும்.

(2) சட்டத்தின் 4 ம் பிரிவின்படி வரி செலுத்தப் பாத்திரப்பட்டவர், 1959 ம் ஆண்டுக்கான பந்தி (1) ல் சொல்லப்பட்ட அட்டவணையை எழுதி நிரப்பி 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவருக்கு அனுப்பிவைக்க வேண்டும். அவர் அந்த வாகனத்தை, அல்லது மிருகத்தை தமது சொந்தத்தில் பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் இனிவரும் எந்த வருடத்துக்கும் அத்தகைய அட்டவணை தரும்படி கேட்கப்பட மாட்டார்.

**2.** சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்த ஒவ்வொருவரும் வேறு அறிவித்தலின்றி—

(அ) 1959 ம் வருடத்துக்கு அவ்வட்டவணையில் சொல்லப்படும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் அவ்வருடத்து மார்ச் மாதம் முப்பத்தோராந் திகதிக்கு முன்னர் வரி கொடுக்கவும் ;

(ஆ) இனிவரும் ஒவ்வொரு வருடத்துக்கும் அவ்வட்டவணையில் சொல்லப்படும் வாகனங்கள், மிருகங்களில் இனிவரும் அந்த வருடத்தில் முப்பது நாட்களுக்கு மேல் தமது சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருப்பனவற்றுக்கு அவ்வருடம் மார்ச் மாதம் முப்பந்தோராந் திகதிக்கு முன்னர் வரி கொடுக்கவும் பாத்திரராவார்.

**3.** எவரேனும் 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்த பின்னர் அந்த அட்டவணையில் சொல்லப்படாததும், சட்டப்படி வரிக்குப் பாத்திரமானதுமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அல்லது 1 ம் உபவிதியின்படி அட்டவணை எதுவும் கொடுக்காத எவரும் முதல் முறையாக அவ்வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை அவர் வாங்கிய அல்லது வைத்திருக்க வேணும் அல்லது உபயோகிக்கவேணும் தொடங்கிய திகதியிலிருந்து எழு தினங்களுக்குள் அவ்விதம் வாங்கியதை, வைத்திருப்பதை அல்லது உபயோகிப்பதைக் குறித்துத் தலைவருக்கு எழுத்துமூலமான ஒரு அறிவித்தல் அனுப்பி இதன் "அ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பத்திரத்தின் மாதிரியில் எழுத்துமூலமான விபர அறிக்கை ஒன்றையும் கொடுக்கவேண்டும்.

**4.** சட்டத்தின் 47 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கை கொடுக்கும் ஒவ்வொருவரும் அந்த அறிக்கை எந்த வருடத்தில் கொடுக்கப்படுகின்றதோ அந்த வருடத்துக்கும் அதற்குப் பிந்திய ஒவ்வொரு வருடத்துக்கும் அந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள, அவருடைய சொந்தத்தில், பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருக்கும், வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் தலைவரால் அவருக்கு அதன்பொருட்டு அறிவிக்கப்படும் காலத்திற்குள் வரிகொடுக்கப் பாத்திரராவார்.

**5.** (1) 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்தபின்னர், அந்த அட்டவணையில் அல்லது அறிக்கையில் பதிந்துள்ள அல்லது சொல்லப்பட்டுள்ள வாகனம் அல்லது மிருகம் எதற்கும் வரிகொடுக்கும் பாத்தியதையிலிருந்து தவிர்த்துவிடும்படி சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி கோரும் ஒவ்வொருவரும் அவ்விதம் கோருதற்கான காரணங்களைக்காட்டி தவிர்த்து விடுதற்கான தமது கோரிக்கை பற்றித் தலைவருக்கு உடனே எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(2) 1 ம் உபவிதியில் சொல்லப்படும் அட்டவணையை அல்லது 3 ம் உபவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்த பின்னர் எந்த வாகனத்தையேனும் அல்லது மிருகத்தையேனும் ஆட்சி பண்ணமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விடும் ஒவ்வொருவரும், அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தாம் ஆட்சி பண்ணமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விட்டுவிட்டதாக உடனே தலைவருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்து, அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை அவர் விற்றுவிட்டால், அதனை வாங்கியவரின் பெயரையும் விலாசத்தையும் தலைவருக்கு எழுத்தில் அறிவிக்கவேண்டும்.

**6.** (1) எவரேனும் வரி கொடுத்ததும் வரி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வாகனத்துக்கும் இதன் "ஆ" அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வாகனங்களைப் பேதப்படுத்திக் காட்டும் எழுத்துகளில் அந்த வாகனத்துக்கேற்ற எழுத்துகளையும் அது எவ்வருடத்துக்கு வழங்கப்படுகின்றதோ அந்த வருடத்தைக் குறிக்கும் இலக்கங்களையும் வாகனங்களின் பதிவு இடாப்பில் உள்ள அந்த வாகனத்தின் இலக்கத்தையும் கொண்ட உலோகத் தகடு ஒன்றைத் தலைவர் கொடுக்க வேண்டும்.

(2) இந்த உபவிதியின் (1) ம் பந்தியின்படி வழங்கப்பட்ட தகடு எதுவும் பாவிப்பினுலேனும் அல்லது வேறு வகைகளிலேனும் தெளிவாகத் தெரியாதுபோனால் அல்லது உருவழிந்துபோனால் அதன் சொந்தக்காரர் தலைவரிடம் அதைத் திருப்பிக்கொடுத்து ஐம்பது சதமும் செலுத்தினால் புதிய தகடு ஒன்றைப் பெறும் உரித்துள்ளவராவார்.

(3) இந்த உபவிதியின் (1) ம் பந்தியின்படி வழங்கப்பட்ட தகடு எதுவும் காணமல் போய்விட்டது அல்லது களவு போய்விட்டது என்று சத்தியக் கடுதாசிமூலமாகவேனும் அல்லது வேறு விதத்திலேனும் தலைவருக்கு நம்பிக்கையுண்டாகுமாயின், அவர், அதன் சொந்தக்காரர் அறுபது சதம் செலுத்தி விண்ணப்பிக்குங்கால் அவருக்கு ஒரு புதிய தகட்டைக் கொடுக்கலாம்.

**7.** (1) ஒவ்வொரு வாகனத்தினதும் சொந்தக்காரர் அல்லது ஒவ்வொரு வாகனத்துக்கும் பொறுப்பாளியாயிருப்பவர் 6 ம் உபவிதியின்படி அந்த வாகனத்துக்குக் கொடுக்கப்பட்ட தகட்டை அந்த வாகனத்தின் துலக்கமான ஒரு பாகத்தில் மாட்டிவைக்கவேண்டும்.

(2) ஒரு வாகனத்துக்குக் கொடுக்கப்பட்ட ஒரு தகட்டை வேறு எந்த வாகனத்திலும் மாட்டி வைக்கக்கூடாது.

**8.** ஒரு வரி கொடுக்கவேண்டிய வாகனம் அல்லது மிருகம் எதுவும் எவரதும் ஆட்சியில் பாதுகாப்பில் அல்லது ஆதிக்கத்தில் இருக்கின்றதா என்பதை நிச்சயித்தற்பொருட்டு, தலைவரேனும் அல்லது தலைவரால்

அதன்பொருட்டு எழுத்தில் அதிகாரமளிக்கப்பெற்ற எவரேனும், அவசியமாயின், கிராமத் தலைமைக்காரரின் அல்லது ஒரு பொலிசு உத்தியோகத்தரின் உதவியோடு பகலில் காலை 8 மணிக்கும் பின்னேரம் 5 மணிக்குமிடையே எக்காணியிலும் அல்லது எக்கட்டிடத்திலும் பிரவேசிக்கலாம். அக்காணிக்கு அல்லது கட்டிடத்துக்கு பொறுப்பாளியாயிருப்பவர், தலைவருக்கு அல்லது அந்த ஆளுக்கு, இந்த உபவிதியின்படியான அவரது அதிகாரங்களைச் செலுத்துதற்கு தேவையான வசதிகளை நல்கவேண்டும்.

**9.** எதேனும் ஒரு தெரு அல்லது பாதை வழியாகச் சென்றுகொண்டிருக்கும் எந்த வாகனத்தையும், அந்த வாகனத்தில் மாட்டிவைக்க வேண்டுமென்று 7 ம் உபவிதியில் வேண்டப்படும் உலோகத் தகட்டைப் பார்வையிடுதற்பொருட்டு தலைவரேனும் அல்லது தலைவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பெற்ற வேறு எவரேனும் நிறுத்துவதும் மறித்து வைப்பதும் நீதியாகும். அந்த வாகனத்தின் சாரதி அல்லது பொறுப்பாளி, அவ்விதம் கேட்கப்படுங்கால், அந்த வாகனத்தை நிறுத்தி தலைவரை அல்லது அந்த வேறு ஆளை அத்தகட்டைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

**10.** இந்த உபவிதிகளில்—

“ தலைவர் ” என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

“ சங்கம் ” என்பது யாழ்ப்பாண மாவட்டத்து கரைச்சிக் கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனப் பொருள்படும் ;

“ சட்டம் ” என்பது கிராம சமுதாயச் சட்டம் (அத்தியாயம் 198) எனப் பொருள்படும்.

**11.** யாழ்ப்பாணம் மாவட்டத்துக் கிராமச் சங்கங்களால் ஆக்கப்பட்டு, **1940** ம் ஆண்டு டிசம்பர் மாதம் **20** ந் திகதி வெளியான **8,697** ம் இலக்க “ கெசெற் ”றில் பிரசுரிக்கப்பட்ட வாகன, மிருக வரி பற்றிய உபவிதிகள், கரைச்சி கிராமப் பகுதியோடு அவை சம்பந்தப்பட்டவரை, அந்த உபவிதிகளை நீக்கி இத்தால் திருத்தப்படுகின்றன.

**“ அ ” அட்டவணை**

பத்திரம்

இலக்கம் : ————.
வட்டார இலக்கம் : ————.

**கரைச்சி கிராமப் பகுதியின் கிராமச் சங்கம்**

வாகன, மிருக வரிபற்றிய உபவிதிகளின் தாற்பரியப்படி கொடுக்க வேண்டிய வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விபர அறிக்கை

சொந்தக்காரரின் அல்லது வைத்திருப்பவரின் பெயர் : ————.

விலாசம் : ————.

கிராமம் : ————.

| வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விபரங்கள் | சொல்லில் எண்ணிக்கை | குறிப்புகள் (துவிச்சக்கர வண்டிகளாயின் உற்பத்தியாளரின் இலக்கம் தருக) |
|---|---|---|
| பாரவண்டிகள், பிரயாணவண்டிகள் அல்லது றிக்ஷோக்கள் தவிர்ந்த சகல இன வண்டிகளும் .. .. | | |
| சகல இன இரட்டைமாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் .. | | |
| சகல இன ஒற்றைமாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் .. | | |
| றிக்ஷோக்கள் .. | | |
| துவிச்சக்கர வண்டிகள் .. | | |
| யானைகள் .. .. | | |
| குதிரைகள் .. .. | | |
| கோவேறு கழுதைகள் .. | | |
| கழுதைகள் .. .. | | |

நானறிந்தவரையில் மேலே தரப்பட்டிருக்கும் விபரங்கள், சகல வகையிலும் உண்மையானவையும் சரியானவையும் என்று நான் உறுதிப்படுத்துகிறேன்.

————,
சொந்தக்காரரின் அல்லது வைத்திருப்பவரின் கையொப்பம்.

திகதி : ————.

**“ ஆ ” அட்டவணை**

| | | |
|---|---|---|
| பாரவண்டி, பிரயாணவண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வண்டி ஒவ்வொன்றுக்கும் | .. | க. கி. வ. |
| இரட்டை மாட்டுப் பாரவண்டி ஒவ்வொன்றுக்கும் | .. | க. கி. இ. வ. |
| ஒற்றைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | .. | க. கி. ஒ. வ. |
| றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. | .. | க. கி. றி. |
| துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றுக்கும் | .. | க. கி. து. வ. |

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.